# இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்நகரில் மாணவர்களின் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

விமானக் குண்டு வீச்சு மற்றும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் அரசு பாடசாலைகளை இயங்க முடியாத நிலைக்கு உட்படுத்தியதைக் கண்டித்து நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று யாழ் மாவட்ட மாணவர்களால் நடாத்தப்பட்டது. குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் சைக்கிள்களில் ஊர்வலமாக வந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் மருதனார்மடச் சந்தியில் ஒன்று கூடி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஆரம்பித்தனர். மருதனார்மடத்தில் ஆரம்பமான இப் பேரணி கே கே. எஸ். வீதி, மேற்கு கோண்டாவில் சந்தி, கிழக்கு கோண்டாவில் சந்தி, திருநெல்வேலி, முத்திரைச்சந்தி ஊடாக யாழ் செயலகத்தைச் சென்றடைந்தது. செயலகத்தில் பதில் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது இதேபோல செஞ்சிலுவைச் சங்கம், அகதிகளுக்கான ஐ நா. தூதுவர், கல்விப் பணிப்பாளர், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி ஆகிய அலுவலகங்களிலும் இம்மகஜர்கள் கையளிக்கப்பட்டன. ஊர்வலத்தில் மாணவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட சில முக்கிய சுலோக அட்டைகள்: ★ சிங்கள அரசின் கொடுமைகள் கண்டு உலக மாணவர்களே பொங்கி எழுங்கள். ★ தமிழீழ மாணவர்களின் கல்வியை அழிக்க சிங்கள அரசின் மாபெரும் திட்டம் ★ சிங்கள அரசின் கொடுமைகள் கண்டு உலக நாடுகளே உறக்கம் ஏனோ? ★ "நிலையான தமிழீழம் உருவாகும் வரைக்கும் தமிழீழ மாணவர்கள் களம் தோக்கிப் பாய்வோம்" ★ எங்கள் நிலத்தில் எங்கள் பலத்தில் தங்கி நிற்போம் ★ "படுவான் கரையிலே மாணவர்

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 51 பிரமோதூத தை 04 (17-01-1991) வியாழன்

★ தேயிலை ஏற்றுமதி ★ எரிபொருள் ★ கப்பல் போக்குவரத்து ★ வேலையின்மை ★ உல்லாசப் பயணிகள் வருகை ★ அந்நிய முதலீடு ★ விலைவாசி உயர்வு

# போர் மூண்டால் இலங்கையின் பொருளாதாரம் சரியும்

## வளைகுடாவில் இன்னும் நான்கு லட்சம் இலங்கையர்!

வளைகுடாவில் ஈராக்குக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள பிணக்கு தீர்க்கப்படாது யுத்தம் மூளுமானால் இலங்கை அதனால் மிக மோசமாகப் பாதிக்கப்படும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

வளைகுடாப் பிராந்தியத்தில் தொழில் புரியும் நான்கு லட்சம் இலங்கையருடைய பாதுகாப்பே அரசின் முன்னுரிமை பெறும் பிரச்சினையாகும்.

மத்திய கிழக்கே இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு முக்கிய சந்தையாக விளங்குகின்றது. போர் வெடித்தால் அப்பகுதிக்குரிய ஏற்றுமதி தடைப்பட்டு இங்கே கையிருப்பு தேங்கிக், களஞ்சியப்படுத்த முடியாத நிலை உருவாகும்.

அந்நியச் செலாவணி மிக மோசமாக வீழ்ச்சியடையும்.

கைத்தொழில், ரயில், விமானப் போக்குவரத்துக்கான எரிபொருளும், சமையலுக்கான எரிவாயுவும் கிடைக்காமல் போகும்.

சுயஸ் கால்வாய் மூடப்பட்டு கப்பல் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்படும். கப்பல்கள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றியே செல்ல வேண்டி வரும்.

போரினால் சர்வதேசப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு விலைவாசி என்றுமில்லாதளவு உயரும்.

வளைகுடாச் சிக்கலால்

—04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் கடும் மோதல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிலாவத்துறை எனும் இடத்தில் விடுதலைப் புலிகளிற்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல்நடைபெற்றது.

கடந்த திங்கள் இடம்பெற்ற இ[illegible] இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது புலிகள் தரப்பில் சந்துரு (ம யோகரட்ணம், விஸ்வமடு) டக்ளஸ் (ச. சந்திரன், கிளிநொச்சி) ஆகிய இரு போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர். (71)

## வெடிக்காத ரவை வெடித்து சிறுவனின் கண்கள் பாதிப்பு

வெடிக்காத துப்பாக்கி ரவை ஒன்றை எடுத்து விளையாடிய சிறுவன் ஒருவன் அது வெடித்ததினால் இரு கண்களும் பாதிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தச்சந்தோப்பைச் சேர்ந்த ப. நிசாகரன் (13) என்ற சிறுவனே இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் ஆவார். (74

## பதிவாளர் மீது புகார் விசாரணை செய்ய நடவடிக்கை

அச்சுவேலிப் பகுதியில் உள்ள பதில் பதிவாளர் ஒருவர் பிறப்பு, இறப்பு விவாகச் சாட்சிப் பத்திரங்கள் வழங்க பணம் அறவிடுவதாக வெளியான செய்தி குறித்து யாழ் மாவட்டக் காணிப்பதிவாளரும், மேலதிகப்பதிவாளருமான திரு. கே. என். போர்மன் விசாரணை நடாத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறு பணம் கொடுத்து பாதிக்கப்பட்டவர்கள் தம்முடன் நேரடியாகவோ, கடித மூலமாகவோ தொடர்பு கொண்டு முறையீடுகளைத் தெரிவிக்கலாம் என அவர் அறிவித்துள்ளார். (66)

## தாளங்குடாவில் ஐவர் கைது வயோதிபர் தாக்கப்பட்டு விடுவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிப்பாளையம் இராணுவ முகாமில் இருந்து தாளங்குடாப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் ஒரு வயோதிபர் உட்பட 5 பேரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று நடந்த இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட வயோதிபர் அடித்துச் துன்புறுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டார் ஏனைய நால்வரும் செட்டிப்பாளையம் முகாம் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களிற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. (71)

## ஆனையிறவுப் பகுதியில் தொடரும் விமானத் தாக்கு

நேற்றுக்காலை 10 மணியளவில் ஸ்ரீலங்கா அரசிற்குச் சொந்தமான 2 குண்டு வீச்சு விமானங்கள் இயக்கச்சி, சங்கத்தார்வயல் பகுதிகளில் குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளன. இத்தாக்குதலில் மதி (14) எனும் சிறுமி காயமடைந்தார்.

நேற்றுமுன் தினம் காலை 8 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் சீ-பிளேன் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளது. இதன்பின்னர் 10 மணியளவில் 2 குண்டுவீச்சு விமானங்கள் அதேயிடத்தில் குண்டுகளை வீசின. இக்குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (71)

## கட்டுவனில் மோதல் புலிகள் ஷெல் தாக்குதல்

கட்டுவன் இராணுவமுகாமில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி வந்தபோது விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடந்தது.

நேற்றுக்காலை 9 30 க்கு நடைபெற்ற இத்தாக்குதலில் அருள் 89 தாக்குதலையும் புலிகள் நடாத்தினர். இதனையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பினர் (71)

## சமாதான நீதிபதிகளும் உடந்தை

## வெவ்வேறு இடங்களில் விண்ணப்பித்து நஷ்டஈடு பெறப் பலர் முயற்சி!

இறந்த தமது மகனுக்குரிய நஷ்டஈட்டைப் பெறுவதற்கு தந்தை ஒரு மாவட்டத்திலும், தாய் இன்னொரு மாவட்டத்திலும் விண்ணப்பித்திருந்தமை யாழ் புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவினருக்கு தெரியவந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆயிரம் நஷ்டஈட்டுத் தொகையினை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தந்தை ஒருவர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் மாவட்டத்தில் மருந்து, பாலுணவு தட்டுப்பாடு

மன்னார் மாவட்டத்தில் உள்ள இரு அகதி முகாம்களிலும், 24 பராமரிப்பு நிலையங்களிலும் உள்ள சுமார் ஐயாயிரம் அகதிகளுக்கு சுகாதாரம், மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

குறிப்பாக குழந்தைகளுக்கான பாலுணவு வகைகளுக்கும், மருந்துகளுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது

வெளியிடங்களில் இருந்து எந்தவொரு போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறாததால் இவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (70)

## மலேரியா தீவிரமாக பரவுகிறது

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் சுமார் 600 பேர் வரையில் மலேரியா நோய்க்குச் சிகிச்சை பெற தினமும் வருகின்றனர்.

இம் மாவட்டத்தில் தற்போது மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

கிராமப்புற சிகிச்சை நிலையங்களில் மலேரியா தடுப்பு மருந்துகள் போதியளவு இல்

—04 ஆம் பக்கம் பார்க்க

# கடும்பாதிப்புக்கான நிவாரணம் பெற

## 4000 விண்ணப்பம்; 2500 பேருக்கு கொடுப்பனவு கிடைத்தது

இராணுவ நடவடிக்கைகளினால் மரணமான மற்றும் நிரந்தர ஊனமுற்றோர்களுக்கான நிவாரணத்தைப் பெற யாழ் மாவட்டத்தில் மட்டும் நாலாயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் யாழ் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ் செயலக புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரிவு வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

இவற்றில் 505 மரணமடைந்தவர்களுக்கான கொடுப்பனவுகளும், 28 ஊனமுற்றவர்களுக்கான கொடுப்பனவுகளும் கடந்த மாதத்தில் மட்டும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்களில் சுமார் 2500 பேருக்குரிய நிவாரணக் கொடுப்பனவுகள் யாழ் செயலகத்தினால் இதுவரை வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (66)

# பயிற்சியைபூர்த்திசெய்த 21 ஆசிரியர் யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம்

ஆசிரிய பயிற்சியைப் பூர்த்தி செய்தபின் இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் யாழ் மாவட்டத்திற்கு 21 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ் ஆசிரியர்கள் யாழ் கல்வித் திணைக்களத்திற்குச் சமூகமளித்து தாபனக் கிளை அதிகாரியைச் சந்தித்து சில விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் விபரம் வருமாறு:-

திருமதி சி. எஸ். ஏ. தேவசேனா, நு/திக்கோயா தமிழ் வித், திருமதி பி. அம்பிகைபாலன், கே/உந்துகொட தமிழ் வித்., திரு ஆழ்வாப்பிள்ளை தெய்வேந்திரன், யா/கட்டைவேலி யாக்கரு வித்., திரு பூதத்தம்பி சக்திவேல், கே/பாணாந்துறை அலவியா ம. வித்., செல்வி ரி. பானுமதி, க/மொன்றி இற்ஸ்தோவ வித் நாவலப்பிட்டி, திரு எஸ். நடராசா, வ/புதுக்குளம் ம. வித்., செல்வி கே சறோஜாதேவி, இ/தலுக்கல்ல த. வித். காவத்தை, செல்வி எஸ். இராதாகிருஷ்ணன், க/கண்டி குண்டகசாலை த. வித்., செல்வி எஸ்.சரசலாதேவி, நு/ஹட்டன் அப்போலீன் த. வித்., திருமதி பி. ஜெயராசா பது/உடுநுவர தமிழ் வித்., செல்வி ந. மாலினி, கிளி/அக்கரையான் த. ம. வித்., செல்வி செ. சாந்தாதேவி, கிளி/அக்கரையான் ம. வித், திருமதி வி.பரமநாதன், கிளி/கண்டாவளை ம. வித்., செல்வி பி. கமலாம்பாள், மா/எலமல்பொத்த முஸ்லிம் வித்., திரு. சிதம்பரப்பிள்ளை சிவராஜன், நி/வல்பொத்துவெல ம. ம. வித்., திரு கே. ஆர் கமலநாதன், க/புசல்லாவ சரஸ்வதி ம. வித்., திருமதி ஆர். எஸ். சிவபாலன், மாங்குளம் ம. வித்., திருமதி ஜே. சுகந்தி, நு/தி பரிசுத்த திருத்துவக் கல்லூரி, செல்வி கே நாகராஜஐயர், மு/வற்றாப்பளை கனிஷ்ட வித்., செல்வி ம. கனகசபை, மட்/வாகரை ம. வித்., செல்வி ஆர். ரேணுகாதேவி, க/நாவலப்பிட்டி கதிரேசன் ம. வித். (ப-17)

## கணவாய் கடித்து மீனவர் படுகாயம்

கணவாய் கடித்ததினால் மீனவர் ஒருவர் படுகாயமுற்றார்.

பண்ணைக் கடலில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

குருநகரைச் சேர்ந்த ந.நவரட்ணம் (52) என்பவருக்கே குதிக்காலில் கணவாய் கடித்துள்ளது. (ப 11)

## சதாமை கொலை செய்ய முயற்சி 'நியூயோர்க் நியூஸ்டே' தகவல்

ஈராக்குடன் போர் ஒன்று மூளுமிடத்து அதன் முதற் கட்டத்தில் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னைக் கொலைசெய்வதற்கான முயற்சியில் அமெரிக்கப் படைகள் இறங்குமென 'நியூயோர்க் நியூஸ்டே' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட இராணுவ ஆலோசகர் ஒருவரை மேற்கோள் காட்டி இச் செய்தியை வெளியிட்டிருக்கும் இப்பத்திரிகை ஈராக்கின் தேசிய இராணுவ தலைமைக் கட்டமைப்பின் ஒரு அதிமுக்கிய அங்கமாகவே சதாம் கருதப்படுகிறார் எனவே அவரை அழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பாக்தாத்தில் அல்லது ஈராக்கின் வேறு இடங்களிற் சதாம் இருக்கக் கூடிய நிலைகளைத் தாக்குவதற்கு அமெரிக்க யுத்த விமானங்கள் தயார் படுத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷிடம் வாஷிங்டனில் பத்திரிகையாளர்கள் போரில் சதாம் கொலை செய்யப்படுவாரா? எனக் கேட்டபோது 'அதற்கு நான் பதிலளிக்கப் போவதில்லை'' என்று சொன்னார்.

## பாடசாலைகளுக்கிடையில் மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் கோட்டக் கல்விப் பிரிவு மட்டத்தில் 01-03-1991இலும். மாவட்ட மட்டத்தில் 05-03-1991 இலும் நடாத்தப்பட்டு மாகாணமட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் 15.03-1991இல் அனுப்பப்படவுள்ளன.

இதே போல மெய்வல்லுனர் போட்டிகள் கோட்ட மட்டத்தில் 10-05-1991 இற்கிடையில் நடாத்தப்பட்டு 15-05-1991 இற்குமிடையில் மாவட்ட போட்டிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு ஜூன் 12, 13 ஆம் திகதிகளில் மாவட்ட இறுதிப்போட்டிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறைக் கல்வி அதிகாரி தெரிவித்தார். (32)

## செயலமர்வு தொடர்கிறது

நல்லூர் சி. சி. சாதனாப் பாடசாலையில் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடாத்தப்படும் சிறுகைத்தொழில் செயலமர்வு தொடரில் நாளை 18-ம் திகதி சிற்றுண்டி, பாடசாலை சீருடை தயாரித்தல் பற்றியும் 19-ம் திகதி வாழ்த்து மடல் தயாரித்தல், காகிதச் சிற்பங்கள் தயாரித்தல் பற்றியும், 20-ம் திகதி யோக்கற் தயாரித்தல், சாறிபீளவுஸ் தெரிவு பற்றியும் விளக்கவுரைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த விளக்கவுரைகளுக்கு எவரும் சமூகமளிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-11)

## செருப்புக்களும் திருடப்படுகின்றன

யாழ் குடாநாட்டில் தற்சமயம் செருப்புகள் களவு போவது சர்வசாதாரணமாகி வருகிறது.

ஆலயங்கள், திருமண வைபவங்கள், மரணச் சடங்குகள் ஆகியவற்றில் பங்கு கொள்ளச் செல்பவர்கள் செருப்புகளை வாசலில் கழட்டிவிட்டுச் சென்றுவிட்டுத் திரும்பிவந்து பார்க்கும் போது அவை திருடப்பட்டுவிடுவதை அவதானிக்கின்றனர்.

இத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பிற்கு குடாநாட்டில் செருப்புகள் விற்பனைக்குச் குறைவாகவும், விலை உயர்வாகவும் உள்ளதே காரணமாகக் கூறப்படுகின்றது' (ப-1)


### யாழ் இந்துக்கல்லூரி
## நூற்றாண்டு நிறைவு விழா

### இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

காலை

8.30 — 10.00 : கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கட்டிட அத்திவார மங்கலப் பொருட்கள் வண்ணை சிவன் கோவிலிலிருந்து ஊர்வலமாகக் கொண்டுவரப்பெறுதல்

10.35 — 11.47 : நூற்றாண்டு விழாக் கட்டிடத்திற்கு அத்திவாரம் இடுதல்

மாலை

3.15 — 4.00 : நடன நிகழ்ச்சி செல்வி ஜெயபாரதி யோகநாதன்

4.00 — 6.00 : இசைக் கச்சேரி சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம்

01125


## போலிக்கடிதங்களுடன் கொழும்பில் புதுவகை மோசடி

வடபகுதியில் தற்போது நிலவும் பதற்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி சில புல்லுருவிகள் இங்கிருந்து கொழும்பு சென்று அங்கு வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்களிடம் பணம் பறிக்கத் தொடங்கியுள்ளனராம்.

இவர்களின் யாழ் உறவினர்கள் கொடுத்ததாகப் போலிக் கடிதங்களைத் தயாரித்து இந்த மோசடி நடைபெறுவதாகத் தெரியவந்துள்ளது.

ஏமாந்தவர்கள் பலர் இது பற்றிப் புறக்கோட்டை பொலிஸில் புகாரிட்டுள்ளனர்.


# ஆத்மசாந்திக் கிரியை அழைப்பு
## திருமதி பொன்னையா செல்லமுத்து

மார்கழி மாதம் 3ஆம் நாள் 18—12—90 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்த திருமதி பொன்னையா செல்லமுத்து அவர்களின் ஆத்மசாந்திக் கிரியை 17—1—1991 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். மேற்படி கிரியையில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவர் காலம் சென்ற சரவணமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா சின்னத்தம்பி இராசையா என்பவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கொட்டாவடி விநாயகர் கோவில் பூசகர் பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், கிளிநொச்சி மாவட்ட சமாதான நீதவானும், பூநகரிப் பகுதி, திடீர் மரண விசாரணை அதிகாரியுமான செல்வரத்தினம் அவர்களின் அன்புத் தாயாரும், சிவபாக்கியத்தின் மாமியாரும், கணேசலிங்கம், இராசலிங்கம், (சுவிஸ்), பாஸ்கரலிங்கம், ரஞ்சிதமலர், வசந்தராணி, ரவிச்சந்திரன், கங்கா, புவனேஸ்வரி, சுமதி, என்பவர்களின் பேத்தியும் சகிதா, வினோதா, ரதீபன், சிந்துஜா, பார்த்தீபன் ஆகியோரின் பாட்டியுமாவார்.

இவரது மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்

சித்தங்குறிச்சி, பூநகரி.

பொ. செல்வரத்தினமும் பேரப்பிள்ளைகளும்.

01077



### சிறு விளம்பரம்

#### தவறிவிட்டது

அரியநாயகம் சற்குணதேவி இல. 387220151V அடையாள அட்டையும், 25,000 ரூபா பணத்துடன் கூடிய மணி பேர்சும் உரும்பிராய்க்கும், கைதடிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் அரியநாயகம் சற்குணதேவி உரும்பிராய் வடக்கு எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்

01124


## வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கு எட்டு மணி நேர வேலை!

கொழும்பிலுள்ள சுகாதார மகளிர் விவகார அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு எட்டு மணித்தியால வேலைத் திட்டம் இம் மாதம் தொடக்கம் அமுல் படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் சகல சிற்றூழியர்களுக்கும் எட்டு மணிநேர வேலைத்திட்டத்தை அமுல் படுத்துமாறு கடந்த வாரம் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் மற்றும் சுகாதார திணைக்கள நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் பணித்துள்ளார்.

இந்த எட்டு மணித்தியால வேலைத்திட்டத்திற்கு என்று மேலதிக ஊழியர்கள் நியமிக்கப் படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (13)


## கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்:- 25-01-91 திங்கள், புதன், வெள்ளி 10-30 a. m.
27-01-91 சனி, ஞாயிறு 10-30 a. m.

மேலதிக விபரங்கட்கு:-

UNIKCO COMPUTER CENTRE
37, Clock Tower Road - Jaffna.
(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாக உள்ள மேல் மாடி) 01126

# கொழும்பிலிருந்து மருந்து எடுத்துவர

## யாழ் செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் அனுமதி மறுப்பு

யாழ் குடாநாட்டுக்கு தேவையான அத்தியாவசிய மருந்து வகைகளை கொழும்பிலிருந்து தருவிப்பதற்கு கடந்த ஏழுமாதமாக யாழ் செஞ்சிலுவைச் சங்கம் எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லையாம்.

இத் தகவலை யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ஆர். தெய்வேந்திரமே தெரிவித்துள்ளார்

சடந்த திங்கட்கிழமை யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் சுதேசிய விற்பனை நிலையத் திறப்பு விழாவில் உரையாற்றுகையில் அவர் இதனை வருத்தத்துடன் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் மோதல்கள் ஆரம்பமாகியதன் பின்னர் சாதாரண மருந்துகளைக் கூட கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தருவிப்பதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளைக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்ற தகவலும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (70)

## லண்டன் 'வாழ்த்து' மடலில் தமிழீழக்கொடுமைகள் சித்தரிப்பு

தமிழீழத்தில் நிகழும் சம்பவங்களை சித்தரிக்கும் புகைபபடத்துடன் கூடிய வாழ்த்து மடல் ஒன்று லண்டனில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வாழ்த்து மடலின் அட்டைப் படத்தில் தமிழீழத்தில் உள்ள விடுகள் தீக்கிரையாக்கப்படும்வேளை அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக வெளியேறிச்செலலும் காட்சியை சித்தரிக்கும் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

'கொட்டிடும் குண்டுகள் கூவிடும் விமானம் எத்தனை உயிர் பறிக்கும்?

'நித்தம் இதுவெனில் நத்தார் எதற்கெனக் கர்த்தரே கூறிடுவீர்!'

என்ற தமிழ்க் கவிநடையில் வாழ்த்துக் கூறப்பட்டுள்ளது.

மேற்கத்தைய நாடுகளில் வசிக்கும் பல தமிழர்கள் இங்குள்ள தமது உறவினர்களுக்கு இந்த வாழ்த்து மடலை அனுப்பிவைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (16)

## நியூசிலாந்துக்கு இலங்கைக் குழு

நியூசிலாந்தில் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற 16 வீரர்களை உள்ளடக்கிய இலங்கை அணி, அர்ச்சுண ரணதுங்க தலைமையில் கடந்த வாரம்நியூசிலாந்திற்கு பயணமானது. இலங்கை டெஸ்ற் போட்டிகளில் பங்குபற்ற தகுதி பெற்றபின் நியூசிலாந்திற்குச் செல்வது இது இரண்டாவது தடவையாகும்

இலங்கை அணி இரண்டு ஐந்து நாள் சர்வதேசப் போட்டிகளிலும், மூன்று ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஒவர்கள் போட்டிகளிலும் கலந்து கொண்டபின் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 26-ம் திகதி நாடு திரும்பும் என்று தெரிவிக்கப்படுகிறது. (16)

## 'ஆட்பலமும், ஆயுதபலமும் உண்டு: விரைவில் விடுதலை எமக்கு கிட்டும்'

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் நாம் ஸ்ரீலங்கா அரசுடன் நேருக்கு நேர் நின்று போராடி அவர்களின் முகாம்களை அழித்து வருகின்றோம். எம்மிடம் ஆட்பலமும், ஆயுதபலமும் உண்டு. விடுதலைப் புலிகள் தமிழ் ஈழ மண்ணை மீட்டெடுப்பார்கள். இதில் எமது மக்களுக்கும், உலகுக்கும் நம்பிக்கை உண்டு.

கொடிகாமத்தில் இடம் பெற்ற யாழ் கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதேசத்தை உள்ளடக்கிய தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கூட்டத்தில் உரையாற்றிய தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு. பாப்பா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், எம்முடன் நேர் நின்று போராட முடியாத சிங்கள அரசு பொருளாதார நெருக்கடிகளை உருவாக்கி தமிழ் மக்களைப் பட்டினிச் சாவிற்கு உள்ளாக்க முனைகின்றது. இந்நிலையில் நாம் எமது மூலவளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்கி சகல பொருளாதாரத் தடைகளையும் உடைத்தெறிய வேண்டுமென்றார். (66)

## மாவியின் சிலை திறப்புவிழா

இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை மாவியின் உருவச்சிலை வண்ணார் பண்ணை சனசமூக நிலையத்திற்கு அண்மையில் கடந்த திங்கட்கிழமை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. (74)

## கல்வித்திணைக்களத்தில் - பல கணக்காளர்கள் இடமாற்றம்

வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சைச் சேர்ந்த கணக்காளர்கள் சிலர் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட கல்வித் திணைக்கள கணக்காளராக இதுவரை கடமையாற்றிய ஆர். துரைசிங்கம் கிளிநொச்சி கல்வித்திணைக்களத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இவர் முல்லைத்தீவு மாவட்டக் கல்வித்திணைக்கள கணக்காளராகவும் கடமையாற்றுவார்.

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கணக்காளராக கடமையாற்றிய வை. குகதாஸ் மன்னார் மாவட்ட கல்வித் திணைக்கள கணக்காளராக இடமாற்றப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட கல்வித் திணைக்கள கணக்காளராக கடமையாற்றிய எம். விஜயரகுநாதன் திருகோணமலை மாவட்ட கல்வித்திணைக்கள கணக்காளராக இடமாற்றப்பட்டுள்ளார். (ப-17

## தென்பகுதி தொழில்நுட்பக் கல்லூரிகளில் தமிழ் மொழிமூல பயிற்சி நெறிகள்

கொழும்பு, கண்டி, களுத்துறை நுவரெலியா பகுதிகளிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் தமிழ் மொழி மூலமான தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் 11ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தேசிய டிப்ளோமா கணக்கியல் (4 வருடம்) வியாபார கற்கைகளுக்கான தேசிய சான்றிதழ் (2 வருடம்), கணக்கீட்டில் தொழில் நுட்பவியலாளருக்கான தேசிய தராதரப்பத்திரம் (2வருடம்) தமிழ் சுருக்கெழுத்தனர் தராதரபப்பத்திரம் (1வருடம்) ஆகிய வணிகத்துறை சார்ந்த 4 பயிற்சி நெறிகள் மட்டுமே இங்கு தமிழ் மொழி மூலம் போதிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே தெகிவளை சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிக்கு தமிழ் மொழி மூலமான பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த சகல மாணவர்களும் மருதானை தொழில நுட்பக்கல்லூரிக்கு மீண்டும் 11.1 91 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பிக்க வேண்டுமென தெகிவளை தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (38)

## மின்சக்தி அமைச்சு அனுராதபுரத்திற்கு இடமாற்றம்

மின்சக்தி எரிபொருள் அமைச்சு அடுத்த மாதம் 25 ஆம் திகதிமுதல் அனுராதபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

கடற்றொழில் அமைச்சு ஏற்கனவே திருமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

## தமிழ் ஊழியர்க்கு பயிற்சி வழங்க அனுராதபுரத்தில் பயிற்சி நிலையம்

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான நிலையம் ஒன்று வட மத்திய மாகாணத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மின்சாரசபை ஊழியர்களுக்கு விசேட தொழில் நுட்பப் பயிற்சி வழங்கப்படுமாம்.

பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த ஊழியர்களுக்கும் இங்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது. (38)

"தலை வழுக்கை பலருக்குப் பெரிய தலைவலி. அதற்கு மருந்து கண்டுபிடித்துள்ள திரு. முரளியின் பேட்டியைத் தருகின்றோம்.

## வழுக்கைத் தலைக்கு வந்திருக்கும் மருந்து!

உலகெங்கிலுமுள்ள ஆண்களுக்கு பண்டு தொட்டுத் தொடர்ந்து வருகிற பிரச்சினை தலை வழுக்கை! முடி முளைக்கப் பல வழிகளில் முயன்று, தோற்றுப்போய், மனம் வெறுத்துப் போனவர்கள் பலர் உண்டு. வழுக்கையை மறைக்கும் யோசனையிலேயே நேரத்தைச் செலவிடுபவர்களும் உண்டு.

இதனால் உலகெங்கிலும் வழுக்கையைப் போக்கி, முடியைக் காப்பாற்றும் மருந்துகளுக்கு ஏக டிமான்ட்!'பதினைந்து நாட்களில் வழுக்கையை விரட்டும் மருந்து' என்று திடீரென்று பத்திரிகைகளில் விளம்பரம் வரும். அத்தோடு சரி! முதலில் வழுக்கையை விரட்டும் ஹீரோவாக Minoxidil மருந்து கண்டு பிடிக்கப்பட்டது. இதுவும் நாளடைவில் தோற்றுப் போனது.

இவர்களுக்கு மறு வாழ்வே இல்லை என்கிற சூழ் நிலையில், சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றிலிருந்து மகிழ்ச்சிகரமான ஒரு செய்தி காதை எட்டியது!

"சென்னையைச் சேர்ந்த ஓர் இளைஞர். சித்த வைத்திய முறையில் கண்டு பிடித்திருக்கும் ஒருவகை ஹேர் ஒயில் முடி உதிர்வதைத் தடுத்து, வறண்ட வழுக்கையில் முடி முளைக்க வைக்கிறது. இந்த ஹேர் ஒயில் நிச்சயம் நம்பிக்கை தரும் கண்டுபிடிப்பு என்றார்கள். பிரபல மருத்துவ பத்திரிகையான 'Anti-Septic' இந்தக் கண்டுபிடிப்பை வரவேற்றுள்ளது.

இந்த இளைஞர் கே. வி. முரளி. எம் பி. ஏ. பட்டதாரியான இவர் இருபது வருடங்களாகச் சர்வதேச மருந்து நிறுவனங்களில் ரெப்ரசென்டேட்டிவிருந்து விற்பனை அதிகாரி வரை பல பதவிகள் வகித்தவர்!

'இங்கிலீஷ் மருந்து கம்பெனிகளில் பணி புரிந்து அனுபவம் பெற்ற நீங்கள், திடீரென்று சித்த மருந்து கண்டு பிடிப்பதில் எப்படி இறங்கினீர்கள்?"

"என் மாமனார் சுந்தரேசன், எனக்குச் சித்தர் பாடல்களை அறிமுகப்படுத்தி வைத்தார். சித்தர்கள் குண்டலினி யோகாவையும், மூலிகை வைத்திய முறைகளையும் பற்றி அதிகம் சொல்லியிருக்கிறார்கள் எனக்கு இரண்டிலும் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் இருந்ததால் நிறைய படிக்க ஆரம்பித்தேன். மூலிகை மருந்தில் அதிக ஈடுபாடு ஏற்பட்டது.

ஆஸ்துமா, வெண்குஷ்டம், மூட்டுவலி, உடல்பருமன், சருமநோய்கள், தோல் நிறமாற்றம், மலட்டுத்தன்மை (Infertility), செக்ஸ் பிரச்சினை போன்றவற்றுக்கு மருந்து தயாரிக்கலாமா என்று ஆராய்ந்து கொண்டிருந்தேன். ஆனால், இந்தப்பிரச்சினைகளுக்கெல்லாம் மருந்து உண்டு. வழுக்கைக்கு மட்டும் உலகில் எங்குமே மருந்து கிடையாது. இதற்கென உருவான ஆங்கில மருந்தான Minoxidil வெற்றியடையவில்லை. அதனால் வழுக்கைக்கு மூலிகை மூலம் மருந்து கண்டுபிடித்தால் அது உலகெங்கும் பரப்பரப்பாகப் பேசப்படும் மேலும், Necessity is the Mother of Invention என்கிற மாதிரி, எனக்கும் வழுக்கை உண்டு. அதுவும் மருந்து கண்டிபிடிக்கத் தூண்டுகோலாக இருந்தது. அதன் விளைவுதான் 'Neo Carin Herbal Hair Oil' கண்டுபிடிப்பு!'

"இந்த ஹேர் ஒயில் நிச்சயம் வழுக்கையை விரட்டும் என்று எப்படி உறுதியாகச் சொல்கிறீர்கள்?"

"இந்த மருந்து ஒரே நாளில் அற்புதங்களைச் செய்யும் என்றெல்லாம் நான் மார்தட்டிக் கொள்ளவில்லை! பலவிதமான சித்தர் பாடல்களில் நூற்றுக்கணக்கான மூலிகைகளை உதாரணம் சொல்லி இதனால் முடிவளரும், வழுக்கை நீங்கும் என்று கூறியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் வரிசைப்படுத்தி, ஒவ்வொன்றாகப் பரிசோதித்து இருபது மூலிகைகளை மட்டும் எடுத்துக்கொண்டேன் அவற்றில் சில கிடைப்பதே அரிது வட இந்தியாவில் மட்டுமே கிடைக்கும். அவற்றைத் தேடிக்கண்டுபிடித்து, நவீன பரிசோதனைக் கருவிகள் மூலமாகத் தயாரித்தேன். பலவருடக் கடும் உழைப்புக்குப் பின் கிடைத்த இந்த மருந்தில் சுமார் ஐந்நூறு சாம்பிள்களை எடுத்து பிரபல டாக்டர்களிடம் (Dermotologists) நேரில் சந்தித்துப் பேசினேன். முதலில் தயக்கம் காட்டினார்கள். நான் பிரபல மருந்து கம்பெனியில் டைரக்டராக இருந்ததனால், பரிசோதித்துப் பார்க்க ஒப்புக்கொண்டார்கள்.

இரண்டு மூன்று வருடங்களாகத் தொடர்ந்து ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கு டாக்டர்கள் இதைப் பயன்படுத்திப் பார்த்தார்கள். பிறகுதான் இது உபயோகமுள்ள கண்டுபிடிப்பு என்று ஒப்புக்கொண்டார்கள். மருத்துவப் பத்திரிகைகளில் இதன் உபயோகத்தைப் பற்றி டாக்டர்களே கட்டுரை எழுதினார்கள். எனக்குச் சான்றிதழும் வழங்கினார்கள். இன்னும் சொல்லப்போனால், 1986 ஆம் வருடமே இந்த மருநதைத் தயாரித்து, விற்பதற்கு லைசென்ஸும் பெற்றுவிட்டேன். ஆனால் மருத்துவர்கள் ஒப்புக்கொண்ட பின்னரே வெளியே சொல்ல வேண்டுமென்று காத்திருந்தேன்.

கிட்டத்தட்ட இருபத்தைந்து மூலிகைகளை வரிசைப்படுத்தி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தேன் வழுக்கைத் தலையில் தந்துகிகளின் ரத்த ஓட்டத்தை அதிகரிக்க (Micro Circulation) ஒரு மூலிகை தேவைப்பட்டது. அது இல்லையென்றால், எல்லா முயற்சியுமே வீண்! அப்போது வியாபார விஷயமாக காஷ்மீர் போயிருந்தேன். அங்கே கீர்பவானி கோயிலில் ஒரு மடத்தின் ஓரத்தில் சாமியார் ஒருவர் படுத்திருந்தார் தெய்வக்களை வில்வ இலைகள் சுற்றிலும் கிடந்தன. முதலில் ஆங்கிலம் மற்றும் இந்தியில் மெதுவாகப் பேசினார். 'எந்த ஊர்?' என்று கேட்டார். 'தமிழ்நாடு' என்றதும் தமிழில் பேச ஆரம்பித்தார். எனக்கு ஒரே ஆச்சரியம்! கொஞ்சம் வினோதமான பேச்சு, செய்கை அவருடைய ஊர் எது என்று கேட்டதற்கு, 'ஆதிசங்கரன் அமர்ந்தவிடம், அரும்பட்டு ஆக்குமிடம்' என்றார் (காஞ்சிபுரம்?).

நான் தேடிவந்த ஒரு மூலிகையைப் பற்றிச் சொன்னேன் மறுநாள் காலை ஐந்து மணிககு வரச்சொன்னார். (பிரம்ம முகூர்த்தம்) கடுங்குளிர். தக்ஸம் என்னுமிடத்துக்குக் கூட்டிப்

(தொடரும்)

# இரு வாரக் குண்டு வீச்சுகளைத் தொடர்ந்தே அமெரிக்கப் படைகள் நகர ஆரம்பிக்கும்

வளைகுடாவில் பெரும் போா வெடிக்கும் சாத்தியம் ஏற்பட்டுவிட்டது. இருதரப்புப்படைகளும் தம் நாட்டுத் தலைவர்களின் உத்தரவுக்காகக் காத்துள்ளனர்.

### வெள்ளை மாளிகை ஆலோசனை

நேற்றுக்காலை 10. 30மணியுடன் ஐ. நா. காலக்கெடு முடிவடைந்ததுடன் அடுத்த கட்டமாக எடுக்க வேண்டிய ராணுவ நடவடிக்கை குறித்து அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெள்ளை மாளிகையில் உயர் அதிகாரிகளுடன் ஆராய்ந்து வருகிறார்.

### பாப்பரசர் வேண்டுகோள்

பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் விடுத்த அறிக்கை ஒன்றில் போரை கைவிடுமாறு இறைவன் பெயரால் இரு தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### போருக்கு தயார் — ஈராக்

இதனிடையே ஈராக் வானொலி நேற்றுக்காலை ஏழு மணிக்கு ஒலிபரப்பிய தனது செய்தி அறிக்கையில் குவைத்திற்காக போராடத் தயார் என்ற சதாம் ஹுசைனின் உரையை மீண்டும் ஒலிபரப்பி தானும் போருக்கு தயார் என்று அறிவித்துள்ளது.

### தலை நகர்களின் நிலை

தலைநகர் பக்தாத் வெறிச்சோடியுள்ளது. அதேபோன்று சவுதிதலைநகர் ரியாட்டிலும் ஒருவித அமைதி நிலவுகிறது. மக்கள் சிற்றலை வானொலிகளில் அடுத்தது என்ன என்பது குறித்து அறியும் ஆவலில் உள்ளனர். பல மத்தியகிழக்கு நாடுகளில் மக்கள் கடைசிநேர பொருள் கொள்வனவில் மும்முரமாக உள்ளனர். ஆனால் ஐரோப்பிய தலைநகரங்களிலோ எண்ணெய்க்காகப்போர்வேண்டாம் என்ற கோஷமிட்டு பல ஊர்வலங்கள் நடைபெற்று வருகின்றன.

### பிரிட்டன் கருத்து கணிப்பு

பிரிட்டனில் பிரபல பத்திரிகையான கார்டியன் எடுத்த கருத்துக் கணிப்பொன்றில் பிரிட்டனில் 54 வீதமானோர் போரை விரும்புகின்றனர். ஆனால், மற்றுமோர் கணிப்பில் ஆண்கள் போர் நடக்க வேண்டும் எனவிரும்பும் அதே சமயம் பெண்கள் போரை விரும்பவில்லை என அறியப்பட்டுள்ளது. பல பிரிட்டிஷ் தாய்மார்கள் தமது பிள்ளைகள் உயிருடன் திரும்பிவர வேண்டும். அதைவிட போரே நடக்காமல் இருந்தால் எவ்வளவோ மேல் எனக்குறிப்பிட்டுள்ளார்.

### இஸ்ரேல் — சிரியா முறுகல் நிலை

இஸ்ரேல் தனது படைகளை போருக்குதயாராக்கியுள்ளது. ஈராக் தாக்கினால் பதிலடி கொடுக்கவே இது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. எனினும், இஸ்ரேல் தாக்குதலை ஆரம்பித்தால் அதன் மீது தாக்குதல் ஆரம்பமாகும் என சிரியா எச்சரித்துள்ளது. தனது டாங்கிப்படையையும் சிரியா இஸ்ரேலுடனான தனது எல்லையில் நிறுத்தியுள்ளது.

### போருக்கு ஜப்பான் நிதியுதவி

போர் ஆரம்பிப்பின் ஜப்பான் அமெரிக்க தரப்பிற்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. இரண்டாயிரம் மில்லியன் டொலர் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. யுத்த அகதிகளை பராமரிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்படப்பல தொண்டர் ஸ்தாபனங்கள் பல முகாம்களை நிறுவிவருகின்றன.

### அமெரிக்காவின் போர்த் திட்டம்

இதேவேளை வளைகுடாவில் எவ்வாறு போர் நடக்கும் என்பது குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்க ராணுவ வல்லுநர்களின் கணிப்பின்படி போர் ஆரம்பிப்பது அமெரிக்க கடற்படை கப்பல்களில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகளில் உள்ளது. இவ் ஏவுகணை தாக்குதலுடன் போர் வெடிக்கும். கடற்படையின்ஏவுகணைத்தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்காவின் யுத்த விமானங்கள் ஈராக்கினுள் புகுந்து ராடர் நிலையம, ராணுவத் தலைமையகங்கள், ஈராக் விமானத்தளம் போன்ற கேந்திரஇலக்குகளை தாக்கும், இத்தாக்குதல்களைத் தொடர்ந்து ஈராக்கிய விமானப்படை பலமிழந்து ஆகாயத்தாக்குதலுக்கு அது ஈடு கொடுக்க முடியாது எனக் கருதப்பட்டால் ஈராக் மீது பறக்கும் கோட்டை எனப்படும் அமெரிக்காவின் போயிங் B-52 குண்டுவீச்சு விமானங்கள் தொடர்ந்து இரு வாரங்களுக்கு குண்டு வீச்சு நிகழ்த்தும். இதன் பின்னரே சவுதியில் உள்ள தரைப்படை குவைத்தை நோக்கி நகர ஆரம்பிக்கும்.

### ஈராக் போர்த் திட்டம்

அமெரிக்கத்திட்டம் இப்படி இருக்க, ஈராக் அமெரிக்கக் குண்டு வீச்சு விமானங்களைக் குழப்பத்தில் ஆழ்த்த புதிய முறை ஒன்றை திட்டமிட்டுள்ளது. எண்ணைக் கிணறுகளில் இருந்து பெரும் தீச்சுவாலைகளை வெளிவரச் செய்வதுடன் கரும்புகை கூட்டத்தையும் வெளிவரச் செய்துள்ளது. இதனால் ஈராக்கிய இலக்குகளை தாக்குவதற்கு அமெரிக்க விமானிகளால் முடியாமல் இருக்கும் என செய்மதிப் படங்கள் மூலம் அறியவந்துள்ளது.

### இலங்கையிலும் பாதிப்பாம்

இதேசமயம் வளைகுடாவில் அணுவாயுதங்கள் பாவிக்க நேரின் அது இலங்கையையும் பாதிக்கலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆசிய நாடுகளின் வருடாந்த மழைவீழ்ச்சி குறையும் என லண்டனில் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

### வெள்ளை மாளிகையின் புதிய அறிவிப்பு

வெள்ளை மாளிகை நேற்று விடுத்த புதிய அறிவிப்பு ஒன்றில் ஜனவரி 15 காலக்கெடு குவைத்தை விட்டு ஈராக் வெளியேறுவதற்கேயன்றி ஐ நா. ஈராக் மீது ராணுவ நடவடிக்கை எடுப்பதற்காக அல்ல எனக் குறிப்பிட்டுள்ளது.

## வளைகுடாவில் போரில் இறங்கவுள்ள இரு தரப்புப் படையினதும் இராணுவ் விபரம்

| | துருப்புக்கள் | கனரக டாங்கிகள் | யுத்த விமானங்கள் | யுத்தக் கப்பல்கள் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா மற்றும் நேச நாடுகள் | 6 லட்சத்து 15 ஆயிரம் | 1960 | 1705 | 145 |
| ஈராக் | 5 லட்சத்து 40 ஆயிரம் | 4 ஆயிரம் | 700 | 43 |

## மாணவி விளக்கமறியலில் உயர் நீதிமன்றத்தில் மனு

கண்டி விளக்கமறியல் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள க. பொ, த. உயர்தர வகுப்பு மாணவி ஒருத்தி தான் தவறாக தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகக் கோரி மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இராணுவத் தளபதி. பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு இந்தமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

இந்த மாணவியின் தகப்பனாரைக் கலகெதர பொலிஸ் இன்ஸ்பெக்டர் மனுவை வாபஸ் பெறுமாறும் இல்லையேல் பாரதூரமான விளைவுகள் வரும் என மிரட்டியதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக ஏன் தண்டிக்கக் கூடாது என நீதிமன்றம் அந்த இன்ஸ்பெக்டரை காரணம் கேட்டுள்ளது. (70)

### மலேரியா...

லாததால் நோயாளர்கள் இங்கு தினமும் வருகின்றனர்.

தனியார் மருத்துவ மனைகளிலும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (35)

### வெவ்வேறு...

பெற்றிருக்கும் அதேவேளை தாயரும் யாழ் மாவட்டத்தில் இதற்குரிய விண்ணப்பத்தை அனுப்பியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று கொழும்பில் நூறுக்கும் அதிகமானோர் இவ்வாறு நஷ்ட ஈட்டினைப் பெற்றிருந்தும் திரும்பவும் யாழ் மாவட்டத்திலும் இதனைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாறான மோசடி நோக்கத்தைக் கொண்ட நடவடிக்கைகளுக்கு சத்தியக்கடதாசிகளை வழங்கிப் பல சமாதான நீதிபதிகளும் உடந்தையாக விருந்திருப்பது தெரிய வருகிறது. (66)

### இராணுவ...

படுகொலை பாசிச அரசின் பயங்கரச் செயலே"

★ "குறோட்டனும், கிறீப்பரும் உணவுக்கு உதவா கீரையும், வெண்டியும் உணவுக்கு உதவும்,"

ஊர்வலம் சென்றுகொண்டிருந்த வேளையில் ஹெலிகப்டர் ஒன்று ஊர்வலத்தை வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (66, ப-10, 74)

### போர்...

இலங்கையின் பங்குச் சந்தையில் பாதிப்புத் தெரிய ஆரம்பித்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் புதிய முதலீடுகளைச் செய்யத் தயக்கம் காட்டுகிறார்கள்.

பல சர்வதேச விமானச் சேவைகள் மத்திய கிழக்குப் பிராந்தியத்தைத் தவிர்க்கத் தொடங்கியுள்ளன. இதனால் இலங்கைக்கு வரும் உல்லாசப்பயணிகள் எண்ணிக்கை குறையும். (70)


## மங்களகரமான திறப்புவிழா அழைப்பிதழ்



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமோதூத வருடம் தை மாதம் 4ஆம் நாள் (17-01-1991) வியாழக்கிழமை பகல் 9-00 மணி முதல் 11-45 மணிவரை வரும் சுபவேளையில்

யாழ்ப்பாணம் 187, கஸ்தூரியார் வீதியில் அமைந்த கட்டிடத்தில்

### ★ வீனஸ் தங்க மாளிகை ★

எனும் ஸ்தாபனத்தை

ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ் நகரில் முன்பு இயங்கி வந்த எமது ஸ்தாபனம் நாட்டு நிலைமை காரணமாக நீர்வேலியில் இதுவரை இயங்கி தற்போது மீண்டும் யாழ் நகரில் ஆரம்பிக்கப்படுகிறது.

22 கரட் தங்க நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
இ. சடாட்சரமும் மகன் ச. புவிச்சந்திரனும்
சகோதரர்களும்

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

01106


## நீள்புகழ் நிலைநாட்டும் யாழ் இந்துக் கல்லூரி

விருத்தம்

கல்லூரி ஒன்றுண்டு காலத்தால் நூற்றாண்டு கண்டு
எல்லூர ஈழத்தின் இந்தொளியாய் ஏழிசையாய்ப் பண்டு
நல்லூரும் வண்ணையும்பின் நமக்கீந்த நாவலரின்றொண்டு
சொல்லூர யாழ் இந்து சூட்டுபெயர் வாழ்த்தாய்செஞ்
சொண்டே.

நம. சிவப்பிரகாசம்

(1919-ம் ஆண்டு 13-ம், 14.ம் வயதில் இக்கல்லூரியிற் கல்வி கற்ற பழைய மாணாக்கன். எண்பத்து நான்கு வயது இளைஞன்.)

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார்காடுடச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 17-01-1991இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.